இந்த ஆண்டு, நாளைய தினம் நடக்கவிருக்கின்ற மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மானியக் கோரிக்கைக்கான அறிவிப்பிலே மேலச்செவல் பேரூராட்சி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தருவதற்கான அறிவிப்பையும் வெளியிடுவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 30 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கான நிதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். எந்தெந்தப் பகுதிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும்பொழுது, தங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்

***776—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கிற மைலம் சட்டமன்றத் தொகுதியானது, மைலம், வல்லம், ஒலக்கூர் ஆகிய ஒன்றியங்களை உள்ளடக்கிய, முழுவதும் கிராமங்கள் மட்டுமே நிறைந்த தொகுதியாகும். இந்தத் தொகுதியில் நகராட்சியோ, பேரூராட்சியோ கிடையாது. முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கிற மக்கள் நிறைந்திருக்கின்ற பகுதியாகும். இந்தத் தொகுதியில் சுமார் 40,000 ஏக்கர் நிலத்தில் நெல் சாகுபடியும், சுமார் 10,000 ஏக்கர் நிலத்தில் மணிலா சாகுபடியும், அதேபோல 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் உளுந்து, எள், காராமணி போன்ற பணப்பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றை விற்பனை செய்வதற்கு பெரும்பாலும் செஞ்சி வேளாண்மை விற்பனை மையத்திற்குத்தான் விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். அறுவடைக் காலங்களில் ஒரு நாளைக்கு சராசரியாக 10,000 மூட்டைகளிலிருந்து 20,000 மூட்டைகள் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த வேளாண்மை விற்பனை மையத்தில் ஒரு நாளைக்கு 500 விவசாயிகளைத்தான்* lot *மூலம் தேர்ந்தெடுத்து, விற்பனை வில்லை போடுகின்றனர். அதனால், விவசாயிகள் நாள் கணக்கில் தங்கள் விளைபொருட்களை விற்பதற்குக் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அவ்வளவு மூட்டைகளையும் சேமித்து வைக்க கிடங்கு வசதியும் இல்லை. விற்பனை பரிவர்த்தனைக் கூடமும் போதுமானதாக இல்லை. மழைக்காலங்களில் விவசாயிகளின் விளைபொருட்கள் மழையிலே நனைந்து சேதமடைகின்றன. நான் சென்ற ஆண்டு வல்லம் ஒன்றியத்திலுள்ள திருவம்பட்டு அல்லது வல்லம் கிராமத்தில் ஒரு வேளாண்மை விற்பனை மையம் அமைக்க வேண்டுமென்று வினா எழுப்பியிருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *எனவே, என்னுடைய தொகுதி விவசாயிகளின் நலன் கருதி, கூட்டேரிப்பட்டி அல்லது வல்லத்தில் ஒரு வேளாண்மை விற்பனை மையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைலம் தொகுதி, கூட்டேரிப்பட்டியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடமும், 12 கிலோ மீட்டர் தொலைவில் விக்கிரவாண்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடமும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. திண்டிவனத்திலிருந்து புதுச்சேரி செல்லும் சாலையில் கிள்ளியனூர் கிராமத்தில் ஏற்கெனவே ஓர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கப்பட்டு, அங்கே விவசாயிகள், உற்பத்தி செய்கின்ற பொருட்களை கொள்முதல் செய்கின்ற வியாபாரிகள் அதிகமாக வராத காரணத்தினால் அந்த விற்பனைக்கூடம் செயல்படாத சூழ்நிலையில் இருக்கிறது. மேலும், கூட்டேரிப்பட்டி கிராமத்தில் விவசாய விளைபொருட்களை கொள்முதல் செய்ய போதிய மொத்த வணிகர்கள் இல்லாததாலும், அருகருகே ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருவதாலும், கூட்டேரிப்பட்டியில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உறுப்பினர் அவர்கள் கூறுவதை ஆராய்ந்து, தேவையேற்படின், அந்த இடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி அவர்கள்.*

டாக்டர் இரா. மாசிலாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, என்னுடைய மைலம் தொகுதியில் 128-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. வல்லம் கிராமத்தின் அருகில் தேசிய நெடுஞ் சாலையையொட்டி சுமார் 20 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த இடத்தில் ஒரு வேளாண்மை*

விற்பனை மையம் அமைக்க வேண்டுமென்று 1966 ஆம் ஆண்டே அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, வல்லத்தில் உள்ள அந்த அரசு புறம்போக்கு நிலத்தை கையகப்படுத்தி, ஒரு வேளாண்மை விற்பனை மையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக, வேளாண்மை விற்பனை மையத்திலுள்ள பரிவர்த்தனைக் கூடங்களை, transit sheds என்று சொல்கிறோம். அந்தக் கூடங்களையெல்லாம் விவசாயிகள் பயன்படுத்துவதைவிட, வியாபாரிகள்தான் அதிகமாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். எனவே, அந்தக் குறைபாட்டையும் நீக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சேத்துப்பட்டு விற்பனைக்கூடத்தில் ஏறத்தாழ 2 கோடி ரூபாய்க்கு மேல் விவசாயிகளினுடைய பணம் கொடுக்கப்படாததால், மோதல் ஏற்பட்டிருக்கிறது. அது 6 மாத காலமாக திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வல்லம் பகுதியில் 20 ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை ஆராய்ந்து, அங்கு நிலம் இருக்குமேயானால், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இரண்டு கோடி ரூபாய் பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், துறை அதற்காக நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கூடிய விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.